# வைரமுத்துவின் வைகறை மேகங்களில் வாழ்வியல் நெறிகள்

# Principles of Life in Vaikarai Megangal of Vairamuthu

**முனைவர் வா. சித்ரா,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோவை 641 402.

**Dr V. Chitra,** Associate Professor, Tamil Department, Rathnavel Subramaniam College of Arts and Sciences, Sulur, Coimbatore 641 402

**DOI : 10.5281/zenodo.7879869**

**Absract**

Poetry, like everything else, has become a capital commodity and a mere commodity. It is the nature of the business world to dress up and sell fakes in competitions. But should this tragedy happen to poetry? Poetry is life of human life. The infamous practice of wrapping it in attractive papers and selling it can be seen in modern times. The reality is that wherever degradation originates, the power to counteract it also originates. In that way, the poet Vairamuthu's poem "Vaikarai Meghagan" shows the contradiction between the world in which the human mind thinks and finds comfort and the injuries caused to it in reality. The New Poems expressed a concern for social reform rather than an emphasis on aesthetics. It reflected the social reality and revealed the various evolutions of human society. In this way Vairamuthu's Vaikara Meghagal poetry collection has recorded the living conditions of the people and points out the existing inequality in the society and gives reform ideas under the title "Vairamuthu's Vaikara Meghagal Life Norms" the society, life facts and the condition of the people have been mentioned.

**Keywords :** வைரமுத்து, பெண், எதார்த்தம், வறுமை, சமூகம், வாழ்வியல்

**ஆய்வுச் சுருக்கம்**

எல்லாவற்றையும் போலவே கவிதையும் மூலதனப் பொருளாகவும், வெறும் விற்பனைச் சரக்காகவும் மாறிவிட்டது எனக் கருத வேண்டியுள்ளது. போட்டிகளில் போலிகளை அலங்கரித்து விற்றுவிடுதல் வியாபார உலகத்தின் இயல்புதான். ஆனால், இந்தத் துயரம் கவிதைக்கும் நிகழ வேண்டுமா? மனித வாழ்வின் ஜீவன் அல்லவா கவிதை. அதைக் கவர்ச்சிக் காகிதங்களில் சிக்க வைத்து விற்கும் இழிவான நிலை சமகாலத்தில் நிகழ்வதைக் காணமுடிகிறது. சீரழிவு எங்கிருந்து தோன்றுகிறதோ அங்கிருந்தே அதை எதிர் கொள்ளும் சக்தியும் தோன்றும் என்பதே எதார்த்த உண்மையாகும். அந்த வகையில் கவிஞர் வைரமுத்துவின் “வைகறை மேகங்கள்” என்னும் கவிதையானது மனிதனின் மனம் எண்ணிச் சுகம் காணும் உலகத்திற்கும் எதார்த்தத்தில் அதற்கு ஏற்படும் காயங்களுக்கும் இடையே உள்ள முரணை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

## முன்னுரை

புதுக்கவிதைகள் அழகியல் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக்காட்டிலும் சமுதாயச் சீர்த்திருத்தம் குறித்த அக்கறையை வெளிப்படுத்தின. சமூக எதார்த்தத்தைப் பிரதிபலிப்பதுடன்

மனித சமூகத்தின் பல்வேறு பரிணாமங்களை வெளிப்படுத்தியது. அவ்வகையில் வைரமுத்துவின் வைகறை மேகங்கள் கவிதைத் தொகுப்பு மக்களின் வாழ்வியல் நிலைகளைப் பதிவு செய்திருப்பதுடன் சமுதாயத்தில் நிலவி வரும் சமத்துவமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி சீர்த்திருத்தக் கருத்துக்களைக் கூறுகின்றன "வைரமுத்துவின் வைகறை மேகங்களில் வாழ்வியல் நெறிகள்" எனும் தலைப்பில் சமுதாயம், வாழ்வியல் உண்மைகள், மக்களின் நிலை ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**வாழ்க்கையும் கவிதையும்**

"உள்ளதை உள்ளவாறு கூறுவது கவிதை. அது உணர்வு பூர்வமாக அறிந்த ஒன்றை உணர்ச்சிப் பூர்வமாக வெளிப்படுத்துவது"(பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, ப. 68) கவிதையானது மனிதனின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளீடாகக் கொண்டது. வாழ்வியல் நிலைகளனைக் கொண்டு அமையும் கவிதையே உயிர்ப்புடன் செயல்படும். புதுக்கவிதையின் இலக்கணம் பற்றி,

**"உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெரிந்துரைப்பது கவிதை"** **(சுபாசு, எது புதுக்கவிதை? ப. 73)**

என்று கவிதைக்கு வரைவிலக்கணம் தருகின்றார் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை. "அனுபவங்கள் ஆகாயத்திலிருந்து கிடைப்பதில்லை. அது வாழ்க்கையிலிருந்து கிடைக்கிறது" (பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, ப. 70) என்று கூறுவர். வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியான இக்கவிதையில் வாழ்வியல் எதார்த்தங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன.

**சமூகம்**

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே "சமூகம்" ஆகும். மனித உறவுகளை உள்ளடக்கிச் சில குறிப்பிட்ட செயல்களைச் சூழலாகக் கொண்டு சமூகம் அமைகின்றது.

"பொதுவான இலட்சியத்தை அடையக் கூட்டுறவாகச் செயற்படும் பகுத்தறிவுள்ள மக்களின் நிலையான ஒரு நியதிக்குட்பட்ட பிணைப்பைச் சமூகம்" (பாஸ்கல் சிஸ்பட் சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப. 14) என்று குறிக்கிறார் பாஸ்கல் சிஸ்பட். பல மனிதர்கள் ஒத்துழைத்து ஒன்று கூடி வாழ்க்கை நடத்துவது மனித சமூகம் எனப்படுவதாகும்" என்று "சம்னர்" என்பவர் குறிப்பிட்டுள்ளார். இச்சமூகத்தின் வாழ்க்கை நிலைதனை வைகறை மேகங்களின் வழியே காணலாம்.

**வாழ்வியல் எதார்த்தங்கள்**

வாழ்வியலைக் கற்பனையுடன் கவிதையாக்குவது எளிது. ஆயினும் நடைமுறை வாழ்க்கையை நடப்பியல் கொண்டு எதார்த்தமாக எடுத்துரைப்பது சற்று கடினமானது. இத்தகைய முயற்சியைக் கவிஞர் வைரமுத்து தம் கவிதையில் கையாண்டுள்ளார். மனிதன் தம் மனதில்

ஆயிரமாயிரம் ஆசைகளையும், எண்ணங்களையும் கொண்டுள்ளான். அவையாவும் தம் வாழ்வில் நிறைவேறாத போது பெரும் ஏமாற்றம் அடைகிறான். எல்லாவற்றின் மீதும் நாம் ஆசைக் கொள்வது இயல்புதான். எனினும் அவற்றின் எதார்த்தத்தைக் கவிஞர் குறிப்பிடுகையில், "எப்போதும் மலையை ரசிக்க முடிவதே அது நம் வரவேற்பறைக்குள் வர மறுப்பதால் தா". என்னும் வரிகளில் மனிதனின் கற்பனை வாழ்க்கைக்குக் கூட எத்தனை இடர்பாடுகள் உள்ளது என்பதையும், எதார்த்த வாழ்வில் மனம் விரும்பும், ரசிக்கும் அனைத்தையும் பெற நினைப்பது வாழ்வின் உண்மையான நிலைதனைப் புரிந்து கொள்ளாமையே காரணம் என்பதையும் அழகான வரிகளில் ஆழமான பொருட்புதைவுடன் கூறியுள்ளார்.

**வறுமை**

வறுமையின் நிறைவிடம் சேரிகள் என்கிறார் கவிஞர். அதோடு மட்டுமல்லாது வறுமையின் ரகசியமும் சேரிகள் தான் என்கிறார். வறுமையைப் பல கவிஞர்கள் பலவாறு கூறியுள்ளார்கள். அவர்களில் முற்றிலும் மாறுபட்ட வறுமை, வறட்டு வாழ்க்கையின் வறுமை என்று கவிஞர் கூறுகிறார். மேலும், அவர் வறுமையை எகிப்தின் பிரமிடுகளோடு ஒப்பிடுகிறார்.

மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும் வறுமையின் கொடுமையை வள்ளுவர்,

**"நெருப்பினுள் துஞ்சலு மாகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பா டரிது" (திருக்குறள், 1049)**

என்று கூறுகிறார். கவிஞர் தம் மௌன மயக்கங்களில் வறுமையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

**"அப்பா இல்லாத**
**அநாதைக் குடும்பத்தில்**
**ஆறு வயிறுகள் ஒவ்வொரு நாளும்**
**பற்றி எரிந்தன**
**அடுப்பு, சாம்பல் பூசி**
**மௌனம் பூத்துக் கிடந்தது" (கண்ணீர் பூக்கள், ப. 33)**

என்றும்,

**"குடும்பம் பாலத்துச் சுவரில் மோதிய**
**வாகனம் போல்**
**வறுமைப் பாதாள**
**விளிம்பில் நின்றது" (மேலது, ப. 34 )**

என்றும் கூறுகின்றார். இந்தியாவில் வறுமை வளமாக வாழ்கிறது என்பதைத் "தமிழன்பன்", "சிலுவையில் அறையப்பட்டதால் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீர் வறுமையில் அறையப் பட்டோம் உயிர்த்தெழுவது ஒரு போதும் இல்லை" என்று கூறுவதன் வழி வறுமையைப் பற்றி அறிய முடிகின்றது.

வறுமையைப் பற்றி மேலும் ஒரு கவிஞர் இவ்வாறு கூறுகிறார். விஞ்ஞானம், அறிவியல் முதலானவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், குடிசைகள் கோபுரமானாலும் வறுமை என்னும்

தொற்றுநோய் மனிதனை இன்னும் விட்டபாடில்லை. மதிய உணவுக்கும் வழியில்லாத நிலையில் மத்தியானம் வந்து என்ன செய்யப்போகிறாய்? பத்துப்பானை தேய்க்க போகிறாயா? என்று தாய் வினவுவதாக அமைந்துள்ள ஞானக் கூத்தனின்,

**"பள்ளிக்கூடம் போறேன்மா**
**பாதைப் பார்த்துப் போய் வாடா**
**கையில் தட்டித் தருவாயா**
**கையை கனக்கும் வேண்டாம்டா**
**மத்தியானம் வருவேன்மா**
**வெயிலில் வந்து சாவாதே**
**மத்தியானம் வருவேன் நான்**
**பத்துப்பானை தேய்ப்பதற்கா"**

**(ஜெ. ஸ்ரீசந்திரன், தமிழ் இலக்கிய வரலாறு. ப. 379)**

என்ற கவிதையானது பசிப்பிணியின் கொடுமையை உணர்த்துகின்றது.

**தமிழர்களின் வறுமை நிலை**

கவிஞர் உதவி என்று வந்தவர்க்கு அள்ளி அள்ளி கொடுத்த வள்ளல்கள் தமிழர்கள். ஆனால், அவர்கள் இன்று வறுமையுற்று இருக்கிறார்கள். தமிழைப் பழித்தவனின் தலையில் கல்லை ஏற்றினான் தமிழகன். ஆனால், இன்று அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றான். தமிழர்கள் வறுமையுற்று இருப்பதை,

**"முல்லைக்குத் தேரை வழங்கினோம்**
**என்று முழங்கினோம்! - இங்கே**
**பிள்ளைக்குப் பாலில்லை பாரடா!**
**தருவார் யாரடா"**

**(காசி ஆனந்தன், காசி ஆனந்தன், கவிதைத் தொகுதி -1 ப.31)**

என்று கவிஞர் தமிழர்களின் தற்போதைய நிலைமையை வருத்தத்துடன் குறிப்பிடுகிறார்.

**பெண் நிலைப்பாடுகள்**

பெண்ணானவள் ஓர் அடிமை ஆன்மாவற்ற அழகு சாதனம், ஆடவனின் மோக வெறியைத் தணிக்க சம்பிரதாய கூடியவள், அலங்கரிக்கப்பட்ட ஒரு பொம்மை என்பன போன்ற நிலையே காணப்படுகிறது. இதனை உணர்ந்த கவிஞர் பெண்ணுக்கு விதிக்கப்பட்ட சம்பிரதாயக் கட்டுப்பாடுகள், அடிமை முறைகள் யாவும் அகற்றப்பட வேண்டும் பெண்ணிற்கு அனைத்து நிலைகளிலும் சுதந்திரம் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

**"தேவைக்கு அதிகமான கட்டுப்பாடுகள்**
**இருக்கும் இடத்தில் தான்**
**தவறுகளும்**
**தவழ்ந்து விளையாடுகின்றன"**

**(காசி ஆனந்தன், காசி ஆனந்தன்,கவிதைத் தொகுதி -1 நறுக்குகள் ப. 72)**

என்று பெண்ணானவள் அதிகப்படியான கட்டுப்பாட்டுத் திணிப்பால் வளர்க்கப்படக்கூடாது என்றும் அக்கட்டுப்பாடே தவறுதலுக்குக் காரணமாக அமையும் என்பதைச் சுட்டிக்காட்டிக் கூறியுள்ளார். அதேசமயம் கட்டுப்பாடே இல்லாமல் பெண் வளர்க்கப்படக் கூடாது என்பதனை,

**"இரத்தத்தில் இருக்கும்**
**சர்க்கரையைப் போலவே**
**கட்டுப்பாடு அதிகரிப்பதும்**
**ஆபத்து" (வாய்க்கால் மீன்கள், ப. 42)**

என்ற வரிகளில் பெண்ணின் நிலைப்பாட்டிற்கு வரையறை தருகிறார் கவிஞர்.

**காதல்**

சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் நீக்கமற நிறைந்திருக்கின்றதோ? அதுபோலவே ஒவ்வொரு உயிர்களிடத்தும் காதல் நிறைந்துள்ளது. அதனால் தானோ மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் காதலைப் போற்றியும் தூற்றியும் வாழ்ந்துள்ளான். இந்த உலகத்தில் பல போர்கள் நிலத்திற்காக நடந்தது போல் பல போர்கள் காதலுக்காகவும் நடந்தேறியுள்ளன. ஆகையால் தான் தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் வீரத்தையும் காதலையும் தங்கள் உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்தனர் என்பதை அறிகிறோம். அந்த வழியில் கவிஞர், தம் காதலையும் இங்குப் பதிவு செய்கிறார்.

**"சின்ன இடையழகைத் தெம்மாங்குத் தேன்பேச்சைப்**
**பண்பாடும் பூங்கண்ணின் பாவனையை - பொன் கழுத்தை**
**ஒப்பேதுமில்லா ஒளிமுகத்தை என்னுயிரே" (மேலது, ப.42)**

என்கிறார். மேலும் காதல் என்பது என்ன? என்று கேட்போர்களுக்குக் கவிஞர் தரும் பதில் காதலை உயர்த்திப் பிடிப்பதாக உள்ளது.

**"மறைத்தாலா தாழை மணங்குறையும்? நீரில்**
**கரைத்தாலா தங்கம் கரையும்? - கரையில்**
**இறைத்தாலா வற்றிவிடும் ஏழுகடல்? நெஞ்சில்**
**மறையாது காதல் மலர்" (வைகறை மேகங்கள், ப. 41)**

நெஞ்சில் மறையாதது காதல் என்பது கவிஞரின் கூற்றாகும்.

காதல் எப்படி சமூகத்தில் பிரிக்க முடியாத ஒன்றாக உள்ளதோ அஃதேபோல் காதலில் பிரிக்க முடியாதது "காதலர்கள் பிரிவு" என்பதாகும். ஊண் மறந்து, உறக்கம் மறந்து இருப்பார்கள் ஆனால் அவர்கள் பிரிந்து ஒரு நிமிடம் கூட இருக்க மாட்டார்கள். அதேநேரத்தில் பிரிவு நிரந்தரமாகும் பட்சத்தில் உயிரை விட்டாலும் விடுவார்களே தவிர காதலர்கள் பிரியமாட்டார்கள். இதையே கவிஞர், "அன்னமே! காதலியே! ஆவி கலந்தவளே! உன்னை பிரிகின்றேன் ஓவியமே! - கண்ணீரும் ஓடிப்பெருக உளமுருகி நம்பிரிவைப் பாடி முடிகின்றேன் பார்!". என்கிறார். மேலும், காதலர்கள் தங்களை வரலாற்று நபர்களோடும் ஒப்பிட்டு பேசுவது இயல்பு. அந்தவகையில் கவிஞரும் தம்

காதலை வரலாற்றோடு புனைந்து பேசுகிறார். கடவுள் மீது தீராதக் காதல் கொண்டு அவர் இருக்கும் இடத்தைத் தேடி பக்தர்கள் செல்வது வழக்கம். அவ்வாறு நாளைக்குச் செல்வோம் என்று கடவுளைக் காண காத்திருந்தவர் “நந்தனார்" இங்கே கவிஞர் தம்மை நந்தனார் போலக் கற்பனைச் செய்கிறார்.

**“சிந்தனை செய்தேன்! ஓர் நாள்**
**சிரிப்பினால் அழைத்துப் பார்த்தேன்**
**சந்தன மேனி தன்னைச்**
**சரமாய் அசைத்துக் காட்டிப்**
**பந்தென ஓடிப் போனாள்**
**பதிலுக்குச் சிரித்தாள், நானும்**
**நந்தனார் போல மீண்டும்**
**நாளைக்கே என்று சொன்னேன்”** **(வைகறை மேகங்கள், ப. 43)**

என்று பாடுகிறார். மேலும், சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் மறையவும், மனித வாழ்வு வளம் பெறவும் காதல் இன்றியமையாதது. எனவே, இளைஞர்கள் காதல்செய்ய வேண்டும் என்பதனை,“கிழவனும், மூத்திருக்கும் கிழவியும் மட்டு மிங்கே களங்கமே இல்லா - தூய காதலைச் செய்திடட்டும் இளைஞரே! நாம்செய்கின்ற இழிசெயல் காத லல்ல: என்கிறார்.

**கல்வி**

இன்றைய சமுதாயத்தில் கல்வி தான் முக்கிய இடம் பிடிக்கிறது. ஆனால், அந்தக் கல்வியையே விலை பேசுகின்றார்கள். அனைவருக்கும் கல்வி என்று சொல்லிவிட்டு கட்டுக்கட்டாகப் பணத்தை லஞ்சமாக வாங்குகிறார்கள். சமுதாயத்தில் புனிதமாகக் கருதப்பட வேண்டிய கல்வி வியாபாரமாக ஆக்கப்பட்டதைக் கவிஞர் மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். “கல்லூரிகள் இவை வணிகமகளின் கர்ப்பப்பைகள்" என்றும், “கல்லூரிக் கட்டிடங்கள் தேசமுகத்தின் பருக்களாய் இங்கே அருவருப்பூட்டுகின்றன” என்றும் கல்வியின் தரத்தை, அவற்றின் நிலையை விளக்குகின்றார். ஏழைகளிடம் கல்வி இலவசமாய் சென்று சேர வேண்டும் என்ற சமூகப் பார்வையுடன் இக்கவிதை இயங்குகிறது.

ஆயிரம் அன்னச் சத்திரம் கட்டுவதைக் காட்டிலும் ஒரு கல்விச் சாலை கட்டப்படுதலே சிறந்தது எனப் பாடினான் பாரதி, அவ்வளவு சிறப்பினையுடைய, மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமான பள்ளிக் கூடமானது தன்னுடைய நாட்டில் இடிக்கப்படுவதைக் கண்டு,

**“ஞானம்**
**பெற்றது**
**நீ**
**உன் மண்ணில்**
**பள்ளிக்கூடங்கள்**
**கட்டப்பட்டதால்**

**நான்**

**என் மண்ணில்**

**பள்ளிக்கூடங்கள் இடிக்கப்பட்டதால்" (வைகறை மேகங்கள், ப. 44)**

என்று அறிவுப் பசியைத் தீர்க்கும் பள்ளிக்கூடம் இடிக்கப்படுவதைக் கண்டு காசி ஆனந்தன், தன் கவிதைத் தொகுப்பான காசி ஆனந்தன் நறுக்குகள் எனும் தலைப்பில் கூறியுள்ளார். இதன் மூலம் பள்ளிக் கூடங்களைத் தான் எதிரிகளால் அழிக்க முடியுமே தவிர எங்களுடைய அறிவினை சிந்தனையாற்றலை யாராலும் தடை செய்ய முடியாது என்று அறைக்கூவல் விடுவது புலனாகின்றது.

**இன்றைய கல்விச் சூழல்**

தற்காலக் கல்வி முறையைச் சாடும் சிற்பி மாணவர்களின் சுமையையும் ஆசிரியரின் அலட்சியத்தையும் கூறுகின்றார். "சிந்தனை நந்தவனமென நம்பிய" "கல்விக் கூடங்களில் ஆசிரியர்களோ விறகு வெட்டிகள் மாணவர்கள் விறகுத் தலையர்கள்" என்று கவிஞர் சிற்பி தம் "புன்னகை பூக்கும் பூனைகள்" என்ற கவிதைத் தொகுப்பில் கூறியுள்ளார். மேலும், அவர் அப்படியே கடினமாக உழைத்துப் பட்டம் பெற்றாலும், அவை, "போட்டி போட்டுக் கொண்டு வாலில்லாத நூலில்லாத பட்டங்களே" என்றும் அவற்றால் எத்தகைய பயன் ஏற்படும்? என்றும் வினவுகிறார்.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

பள்ளிகளும், கல்லூரிகளும், பாடப்பிரிவுகளும் பெருகிக் கொண்டே செல்லும் அளவிற்கு அலுவலகங்களும், நிறுவனங்களும் பெருகிக் கொண்டே வருகின்றது என்றாலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருமடங்காய் பெருகிக் கொண்டே தான் இருக்கிறது. இதனையே கவிஞர் கந்தர்வன்,

**"மரங்களும் செடிகளும்**

**ஒவ்வொரு காலத்தில்**

**மலர்தல் போல**

**எப்போதேனும் எங்களுக்கு**

**வேலை வாய்ப்புகள்" (காசி ஆனந்தன், காசி ஆனந்தன், நறுக்குகள் ப. 17)**

இன்றைய சமுதாயத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையைக் கவிஞர் சிற்பி "மௌன மயக்கங்கள்" எனும் கவிதையில் இளைஞர்களின் குரலாக,

**"தீப்பந்தங்களைத் தூக்கியபடி**

**உச்சக்குரலில்**

**வேலை கொடு**

**எங்களை வாழவிடு"**

**(ஆய்வாளர் கட்டுரைகள் (தொகுப்பு நூல் - 2) இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள், ப. 339)**

என்று முழங்குவதாகக் கூறுகின்றார் .

மேலும், குழந்தைத் தொழிலாளர் நிலையினைக் குறிக்க இவ்வாறு குறிப்பிடுகிறார். சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ள வறுமைக் கொடுமையால் பள்ளிக்குச் சென்று படிக்க வேண்டிய தம் குழந்தைகளைத்; தொழிலாளர்களாகப் பயன்படுத்தும் நிலைக்குப் பெற்றோர்கள் தள்ளப்படுகின்றனர் எனலாம். அவ்வாறு, அக்குழந்தைகள் குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவதை மு மேத்தா,

**“வெறிச் சோடிக் கொண்டிருந்த**
**கடைத்தெருவில்**
**வாடிக்கைக்காரர்கள் இல்லாது**
**ஷீபாலிஸ் சிறுவர்கள்**
**முடங்கிக் கிடந்தார்கள்”** **(கண்ணீர் பூக்கள், ப. 58)**

என்று படம்பிடித்துக் காட்டுகின்றார். இவ்வாறாக, மக்களின் வாழ்க்கை முறைகளையும், சமுதாய நிலைகளையும் தம் கவிதை “வைகறை மேகங்கள்" வாயிலாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் வைரமுத்து.

**முடிவுரை**

இன்றைய சூழலில் புதுக்கவிதைகள் சமுதாயத்தைப் பற்றி நன்றாகவே சிந்திக்கின்றன: விமர்சிக்கின்றன: சாடுகின்றன: மக்களுக்குத் தேவையானவை எவை, தேவையற்றது எவை என்பதையும் எடுத்துரைக்கின்றன. வைரமுத்துவின் கவிதைகளிலும் இக்கூறுகளைக் காணமுடிகிறது. அவருடைய எதார்த்த சிந்தனைகள் அவரைச் சிறந்த புதுக்கவிஞராக அடையாளம் காட்டுகின்றன. “வைகறை மேகங்கள்" மனித வாழ்வியலின் எதார்த்தக் கடலில் நீந்திச் சென்று அவற்றின் உண்மையான ஆழத்தையும், அர்த்தத்தையும் அழகான வரிகளில் நிறைவான பொருட்புதைவுடன் எடுத்துரைக்கும் வாழ்க்கை கருவூலமாகத் திகழ்கிறது. வைரமுத்துவின் வைகறை மேகங்கள் கவிதைத் தொகுப்பு, மக்களின் வாழ்வியல் நிலைகளைப் பதிவு செய்திருப்பதுடன் சமுதாயத்தில் நிலவி வரும் சமத்துவமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டி சீர்த்திருத்தக் கருத்துக்களைக் கூறுகின்றன என்ற இந்த ஆய்வின் கருதுகோள் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

**துணைநின்ற நூல்கள்**

1. இறையன்பு. (2005). வாய்க்கால் மீன்கள், (நான்காம் பதிப்பு). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். அம்பத்தூர்.
2. காசி ஆனந்தன், (1999), காசி ஆனந்தன்,கவிதைத் தொகுதி -1, (முதல் பதிப்பு). காசி ஆனந்தன் குடில். சென்னை.
3. காசிராசன், இரா., (2004). தமிழ் இலக்கிய வரலாறும் திறனாய்வும், (முதல் பதிப்பு). பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

4. குருசாமி, ம.ரா.போ., ஆய்வாளர் கட்டுரைகள் (தொகுப்பு நூல் - 2) இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
5. சிற்பி பாலசுப்ரமணியம், (1997). கண்ணீர் பூக்கள், (முதல் பதிப்பு). கண்ணீர் பூக்கள் பதிப்பகம், சென்னை.
6. சுபாசு, (1997), எது புதுக்கவிதை? (முதல் பதிப்பு). சுபாலிகா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.
7. திருவள்ளுவர், (2002).திருக்குறள், (பரிமேலழகர் உரை), (ஐந்தாம் பதிப்பு), சாராதா பதிப்பகம், சென்னை.
8. பாலா. (1990). புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை. (முதல் பதிப்பு). அன்னம் புத்தகநிலையம். மதுரை.
9. பாஸ்கல் சிஸ்பட், (2000). சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், (முதல் பதிப்பு), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
10. வைரமுத்து. (1992). வைகறை மேகங்கள். (முதல் பதிப்பு), சூர்யா லிட்ரேச்சர்ஸ் (பி) லிட். சென்னை.
11. ஸ்ரீசந்திரன், ஜெ. (2021). தமிழ் இலக்கிய வரலாறு. (முதல் பதிப்பு). இராயப்பேட்டை நெடுஞ்சாலை பதிப்பகம், சென்னை.


### Referenes


1. Iraianbu. (2005). Estuary Fishes, (Fourth Edition). New Century Book House. Ambattur.
2. Kasi Anandan, (1999), Kasi Anandan, Poetry Vol-1, (First Edition). Kasi Anandan hut. Chennai.
3. Kasirasan, Ira., (2004). A History and Review of Tamil Literature, (First Edition). Palaniappa Brothers, Chennai.
4. Guruswamy, M.R.P.O., Research Papers (Collection Book - 2) Life Thoughts in Literature, Palaniappa Brothers, Chennai.
5. Sirbi Balasubramaniam, (1997). Flowers of Tears, (First Edition). Tears of Tears Publishers, Chennai.
6. Subasu, (1997), What is New Poetry? (First Edition). Subalika Publishing House, Tiruchirappalli.
7. Thiruvalluvar, (2002). Thirukural, (Parimelazhagar Text), (Fifth Edition), Sarada Publishing House, Chennai.
8. Bala. (1990). A new poem is a new perspective. (First Edition). Annam Bookstore. Madurai.
9. Pascal Cispat, (2000). Fundamental Principles of Sociology, (First Edition), Palaniappa Brothers, Chennai.
10. Vairamuthu. (1992). Vaikara clouds. (First Edition), Surya Literatures (B) Lit. Chennai.

11. Srichandran, J. (2021). History of Tamil literature. (First Edition). Rayapetta Highway Publishing House, Chennai.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**சித்ரா. வா "வைரமுத்துவின் வைகறை மேகங்களில் வாழ்வியல் நெறிகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 2, ஏப்ரல் 2023, பக். 35-44

**Cite this Article in English**

**Chitra. V "Principles of Life in Vaikarai Megangal of Vairamuthu"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 2, April 2023, pp. 35-44